**நகர முதலீட்டு மற்றும் அபிவிருத்திக் கம்பனி – 2017**

நகர முதலீட்டு மற்றும் அபிவிருத்திக் கம்பனியினதும் (“கம்பனி”), 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய இந்த அறிக்கை வெளியிடப்படுகின்றது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை சிறு மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபையின் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்கு என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வு சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானவை என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களுக்கான அலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) - கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் கணக்குகளுக்கமைய நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நடைமுறை கணக்கின் மீதி ரூபா 272,454,351 ஆன போதிலும், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கம்பனிக்குரிய நடைமுறைக் கணக்கின் மீதியானது ரூபா 272,723,429 ஆனமையால் ரூபா 289,078 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்த வேண்டியதாக ரூபா 2,930,045,861 தொகையான மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கம்பனியிலிருந்து பெற வேண்டிய மீதி ரூபா 2,930,576,692 ஆனமையால் ரூபா 530,831 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 7.3 ஆம் பிரிவு | அரச முயற்சிகள், அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் அறிவுரைகளுக்கமைய அதன் பிரகாரம் பின்பற்றப்பட வேண்டியதுடன் ஏனைய நடைமுறைகள் மற்றும் ஏற்பாடுகள் நிறுவனத்தின் தேவைக்கேற்ப உருவாக்கப்படுமாயின், அதற்காக வரிசை அமைச்சின் மற்றும் பொது திறைசேரியின் முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும், கம்பனியால் தயாரிக்கப்பட்ட செயன்நடைமுறை மற்றும் ஏற்பாடுகள் தொடர்பில் அவ்வாறு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 7.4.5 ஆம் பிரிவு | வருடாந்த பொருள் மெய்மையாய்வுக் குழுவொன்று நியமிக்கப்பட்டு விசாரணைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 9.2(ஈ) ஆம் பிரிவு | கம்பனிக்கான நிறுவனக் கட்டமமைப்பொன்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவு

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகளின் விளைவானது ரூபா 206.7 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபமாக இருந்ததுடன், அதற்கு முன்னொத்த கடந்த வருடத்தின் வரிக்கு முன்னரான தேறிய இலாபமான ரூபா 201.7 மில்லியனுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 05 மில்லியனால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் போது கடன் வட்டி செலவினம் ரூபா 30.5 மில்லியனால் அதிகரித்திருந்த போதிலும், வாடகை வருமானம் மற்றும் சேவைக் கட்டண வருமானம் ரூபா 24 மில்லியன் மற்றும் ஏனைய தொழிற்பாட்டு வருமானம் ரூபா 10.7 மில்லியனால் அதிகரித்தமை இந்த பெறுபேற்றிலான அதிகரிப்பு தொடர்பில் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு நிதிசார் மீளாய்வு

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கம்பனியின் வாடகை கட்டணம் மற்றும் சேவைக் கட்டணம் வருமானம் ரூபா 24 மில்லியனாலும் ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா 10.7 மில்லியனாலும் அதிகரித்தமையர் கம்பனியின் வருமானம் ரூபா 35.1 மில்லியனால் அதிகரித்தமையால் கடந்த வருடத்தின் 74.09 சதவீதமான மொத்த இலாப விகிதமானது மீளாய்வாண்டின் போது 75.85 சதவீதம் வரை அதிகரித்திருந்த போதிலும், கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் கடன் வட்டிச் செலவினம் ரூபா 30.5 சதவீதத்தினால் அதிகரித்தமையின்

அடிப்படையில் கடந்த வருடத்தில் 32.86 சதவீதமான தேறிய இலாப விகிதம் மீளாய்வாண்டின் போது 31.86 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

(ஆ) கடந்த ஆண்டின் போது கம்பனியின் நடைமுறை விகிதம் 4.36:1 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் போது அது 4.21:1 வரையான சிறிய அளவிலான குறைவொன்று காணப்பட்ட போதிலும், நடைமுறை விகிதத்தினை உயரிய மட்டத்தில் பேணிச் செல்வதற்கு கம்பனி தவறியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

கம்பனிக்கான தூரநோக்கொன்று மற்றும் குறிக்கோளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன், பிரதான நோக்கங்களாக எந்தவொரு பிரதேசத்திலும் எந்தவொரு அபிவிருத்தி செயற்திட்டத்தையும் அபிவிருத்தி செய்தல், கட்டியெழுப்புதல் மற்றும் நடைமுறைப்படுத்தல் ஆகும். எவ்வாறெனினும் அடைவதற்கு உத்தேசித்துள்ள பௌதீக மற்றும் நிதி இலக்குகளை காண்பிக்கும் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கம்பனியின் முதன்மையான பணிகளுக்கான பிரதான செயலாற்றல் குறிகாட்டி முகாமைத்துவத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மீளாய்வாண்டின் கம்பனியின் செயலாற்றலை கணக்காய்வின் போது திட்டவட்டமாக குறிப்பிடமுடியாது போனது.

### 4.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

ரூபா 17,965,769 கிரயமான லேன்ட் க்ரூஷர் வகையிலான வாகனமொன்று கொள்வனவு செய்யப்பட்ட 2014 ஆம் ஆண்டு முதல் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவரின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டிருந்தது.

### 4.3 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் 08 ஊழியர்கள் இரட்டை அடிப்படையில் நகர முதலீட்டு மற்றும் அபிவிருத்திக் கம்பனிக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட 79 உதவித் திட்டமிடல் உத்தியோகத்தர்கள் பணி ஒப்படைப்பின் அடிப்படையில் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு இணைப்பு செய்யப்பட்டிருந்தனர். இதற்கமைய நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு தேவையான பதவியணி உரிய நடைமுறையை பின்பற்றி இணைப்பு செய்வதற்கு பதிலாக, நகர முதலீட்டு மற்றும் அபிவிருத்திக் கம்பனியால் ஆட்சேர்ப்பு நடைமுறை தொடர்ந்தும் பின்பற்றப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 22 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கமைய கம்பனியால் 2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2018 யூலை 17 ஆந் திகதி நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 வருடாந்த பாதீடு

2003 யூன் 02 இன் PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5:2:4 ஆம் பந்தியின் பிரகாரம், வருடாந்த பாதீடு அந்த வருடத்திற்கு 03 மாதங்களுக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான பாதீட்டினை அங்கீகரிப்பற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்பு |
|---|---|---|
| (அ) | சட்டங்கள் மற்றும் விதிகள் | நிதிப்பிரமாணம் மற்றும் பொது முயற்சிகள் சுற்றறிக்கைகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை. |
| (ஆ) | கடன்பட்டோர் கட்டுப்பாடு | கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெறுவனவுகளை அறவிடுவதற்கு கருத்திற்கொள்ளக்கூடிய அளவிலான தாமதங்கள் நிலவியமை. |
| (இ) | மனிதவள முகாமைத்துவம் | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிராமை. |